**கட்டுநாயக்க சீதுவை நகர சபை**

---

**கம்பஹா மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 மற்றும் 2.2 ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறைந்த வருமானம் பெறும் பிள்ளைகளுக்கு பாதணிகளை வழங்குவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 500,000 கடன்தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டுநாயக்க சீதுவை புதிய சந்தைத் தொகுதியின் கடைகளை வாடகைக்கு வழங்கியதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கிடைக்க வேண்டிய முற்பண வைப்புப் பெறுமதி ரூபா 2,266,491 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 30 ஆந் திகதி நிறுவனத்திற்குக் கிடைத்த ரூபா 3,125,700 பெறுமதியான இரண்டு டெபே ரெக்ரர் மற்றும் ரூபா 652,050 பெறுமதியான இரண்டு ரேலர்கள் என்பன நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 04 ஆயுர்வேத நிலையங்களில் ரூபா 264,536 கூட்டுத்தொகையான மருந்து இருப்புக்கள் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 தொங்கல் கணக்குகள்**

தொடர்ச்சியாக தீர்க்கப்படாமல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 12,051,699 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 கணக்கு விடயங்களில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுக்கும் பதிவேடுகள் / பட்டோலைகளுக்கும் இடையில் ரூபா 56,973,501 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர், சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் பிரகாரம் ரூபா 34,702,611 தொகை பதிவேட்டின் பிரகாரம் ரூபா 34,711,957 மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 35,711,503 ஆக இருந்தன.

(இ) மீளாய்வாண்டில் ஆதனவரி பெறுவனவு, கணக்கின் பிரகாரம் ரூபா 104,856,946 தொகை ஆகவும் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 108,871,850 ஆகவும் இருந்தமையால் ரூபா 4,014,904 வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

(i) மாதாந்த வங்கி இணக்கக் கூற்றின் மூலம் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்ட ரூபா 10,524 தொகையான மதிப்பிழந்த காசோலைக்காக பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல வருட காலமாக தொடர்ச்சியாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 61,870 தொகையான மதிப்பிழந்த காசோலை மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,535,227 தொகையான பெற வேண்டிய சம்பள மீளளிப்புக்களில் ரூபா 23,922,462 தொகை முன்னைய ஆண்டுகளுக்குரிய பெறவேண்டிய பணமாக இருந்ததுடன் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

பல வருட காலமாக தொடர்ச்சியாக முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,534,700 பெறுமதியான மதிப்பீடு செய்யப்பட்ட தவணை மூலதனச் செலவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

#### தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை

விரிவான பட்டோலை, நிலையான வைப்புச் சான்றிதழ் மற்றும் புதுப்பிக்கும் அறிவித்தல் என்பன சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 24,660,572 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 396 | 1,087,367 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய 13 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 560,393 பெறுமதியான 02 காசோலைகள் 03 வருடங்களுக்கு மேற்பட்டவையாகும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டிக் கோவை | | |
| | (i) 3.6.1 | 2,647,200 | மீண்டும் கட்டளையிடும் போது ஆரம்ப பெறுகைகள் கையளித்தல் திகதி முதல் ஆறுமாத காலமொன்று கடப்பதற்கு முன் மீண்டும் அந்த விலையில் கட்டளையிடல் மேற்கொள்ளப்பட முடியுமாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் 24 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2015 திசெம்பர் மாதத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டு சிபாரிசு அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. |
| | (ii) 1.2.1 இன் (அ), (இ) மற்றும் (ஊ) | - | குறுங்கால எல்லையில் மிகவும் வேகமாக தொழில்நுட்ப மாற்றங்களுடன் விலைகளில் போதியளவான மாற்றங்களை ஏற்படுத்துகின்ற கணனி மற்றும் அதனுடன் தொடர்புடைய துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்யும் போது, மேற்கூறப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டமையின் காரணமாக விலை மற்றும் தொழில்நுட்ப நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் கைநழுவியிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,379,143 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,353,763 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) இலங்கை வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய காசேட்டின் மீதிகளையும், வங்கி மீதியையும் இணக்கம் செய்வதற்காக இனங்காணப்படாமல் ரூபா 12,536,426 தொகை திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு காசுக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கிற்குரிய தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக்கூற்றில் ரூபா 32,582 தொகையான வைப்புக்கள் தீர்த்து வைக்கப்படாமல் தொடர்ச்சியாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ | ரூபா 000’ |
| வீதவரியும் வரியும் | 105,350 | 106,661 | 105,151 | 57,462 | 110,820 | 105,075 | 104,729 | 61,606 |
| வாடகை | 9,575 | 12,706 | 10,134 | 3,571 | 11,284 | 11,342 | 11,014 | 3,507 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,631 | 2,842 | 2,842 | 66 | 4,317 | 3,256 | 3,256 | 66 |
| ஏனைய வருமானம் | 50,372 | 79,688 | 68,707 | 3,020 | 54,487 | 57,159 | 45,654 | 2,882 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவையான ரூபா 44,210,218 தொகையிலிருந்து ரூபா 18,029,949 தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவை அறவிடலின் செயல்முன்னேற்றம் 41 சதவீதமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டில் அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை ரூபா 66,000 இலிருந்து மீளாய்வாண்டில் எந்தத் தொகையும் அறவிடப்படாதிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் அதில் ரூபா 27,100 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் சிட்டையிடல் மதிப்பீட்டை விஞ்சி 37 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டமையால் மதிப்பீடுசெய்தல் சாத்தியமான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 கடை வாடகை**

(அ) சீதுவை சந்தைத் தொகுதியில் மதிப்பீடு செய்யப்பட்ட கடை வாடகை அறவிடப்படாமையால் மீளாய்வாண்டில் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 400,500 ஆகும்.

(ஆ) 2013 ஆம் ஆண்டு முதல் 06 கடைகளிலிருந்து பகுதியாக அறவிடப்பட்ட முன்வைப்புத் தொகை நிலுவை மீதி ரூபா 2,266,491 ஆக இருந்ததுடன் முன்வைப்புத் தொகை செலுத்தாமையின் காரணமாக அந்தக் கடைகளை மீளக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

(அ) நகரசபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் கீழ் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள 02 வெதுப்பகங்கள், 02 விருந்தினர் விடுதிகள் மற்றும் 03 ஹோட்டல்களிலிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 750,884 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டணத்திற்காக கடந்த ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட மொத்தக் கிரயத்தில் 1 சதவீதத்தை விஞ்சாத கட்டணமொன்று இனங்காணப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலரீதியான அனுமதிப்பத்திரக் கட்டணம், மற்றும் வியாபாரி வரிகள் திருத்தம் செய்யப்பட்டு சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் கீழ் 1987 இன் போது விதிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திர மற்றும் வியாபார வரிகள் எந்தவித திருத்தங்களின்றி அவ்வாறே மீளாய்வாண்டிற்காகவும் அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

நகர சபையிலிருந்து வெளியே ஒரு கிலோ மீற்றர் அளவிலான தூரத்தில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட காணியில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் 2016 யூலை மாதத்தின் போது ரூபா 2,308,383 தொகை செலவில் சபையின் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்காக வாகனத் தரிப்பிட நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும், இந்த வாகனம் நிறுத்தி வைக்கும் நிலையம் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) மழை நீர் அகற்றும் செயற்திட்டத்திற்கும், நூலக நிர்மாண செயற்திட்டத்திற்கும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன் தவணைப் பணத்தை மீள செலுத்தும் போது முறையே ரூபா 222,817 தொகை மற்றும் ரூபா 441,788 தொகைகளாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட கடன் தவணைப் பணங்களை ஈடுசெய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) டயர் மற்றும் ரியூப் தொடர்பாக 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது விலைப்பட்டியலில் காணப்பட்ட ரூபா 41,770 பெறுமதியான 11 ரியூப்கள் களஞ்சியத்தில் காணப்படாதிருந்ததுடன் புதிய டயர் மற்றும் ரீயூப்களை விநியோகிக்கும் போது பயன்படுத்தப்பட்ட பழைய டயர் மற்றும் ரியூப்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் ரியூப் எதுவும் காணப்படாதிருந்ததுடன் 700X16 வகையின் டியூப் பெறுகைகளுக்கு 2017 மார்ச் 24 ஆந் திகதி கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும், வழங்குனரைத் தெரிவு செய்வதற்கு 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக 35 பராமரிப்பு மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன், அதற்காக பொருட்களை விநியோகிக்கும் போது ஒவ்வொரு மதிப்பீட்டிற்கும் சமமான அளவில் சிப்ஸ் கல் விநியோகிக்கப்பட்டிருந்தமையால் அது ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. மேலும், களஞ்சியப் பேரேட்டில் பொருட்களின் பெறுவனவு மற்றும் விநியோகித்தல்களின் பிரகாரம் ரூபா 74,948 பெறுமதியான 9.14 கியூப் சிப்ஸ் கல் பெறுவனவுகளை விட ரூபா 260,678 பெறுமதியான 31.79 கியூப் சிப்ஸ் கல் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 நவம்பர் 09 ஆந் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மேல்மாகாண உள்ளூராட்சி அமைச்சரின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் சபையினால் சீதுவ விலேஜ் என்ற பெயருடைய காணியில் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் வெளிநபரொருவர் வியாபார நடவடிக்கைகளுக்குக்காக கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிர்மாண நடவடிக்கைகளை நிறுத்துமாறு உள்ளூராட்சி ஆணையாளர் 2017 மார்ச் 29 ஆந் திகதி அறிவித்திருந்தார். அதன் பிரகாரம் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு, வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவினம் மற்றும் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு முடியாமையினால் அவருக்கு ஏற்பட்ட நட்டமாக ரூபா 13,712,795 கூட்டுமொத்தமாக செலுத்துமாறு அறிவித்து வெளி சட்டத்தரணி மூலம் சபைக்கு அறிவித்தல் விநியோகிக்கப்பட்டிருந்தது. மேலும் இந்தக் கட்டிடம் வாடகை வாடிக்கையாளர் தரப்பினருக்கு கையளிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கும் போது 2017 பெப்ரவரி 04 ஆந் திகதி ரூபா 32,200 செலவில் செய்திப்பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) சனசமூக மண்டபம் மற்றும் கரப்பந்து விளையாட்டு மைதானம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக சீதுவ அமுன வீதியில் 47.5 பேர்ச் நிலப்பகுதி 2001 ஏப்ரல் 24 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் நகர சபையினால் கைப்பற்றப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 5,000,000 இழப்பீட்டுத் தொகை உரிய காணி உரிமையாளருக்கு செலுத்த வேண்டி இருந்தது. காணி கையேற்கப்பட்டு 17 வருடங்கள் கடந்திருந்த போதிலும், காணி உரிமையாளர்களுக்குரிய இழப்பீட்டுப் பணம் உரிய காலத்தில் செலுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் இழப்பீட்டுப் பணத்திற்கு மேலதிகமாக 7 சதவீத வட்டியும் 2001 ஏப்ரல் 24 ஆந் திகதி முதல் செலுத்த வேண்டிய ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நகர சபையின் கட்டிட பிரிவின் மூலம் அமுல்படுத்தப்பட்டு நடாத்திச் செல்லப்படுகின்ற பதிவுச் சான்றிதழ் மற்றும் பரிசோதனைக் கட்டண தண்டப்பணம் போன்ற விடயங்களுக்குரியதாக சேகரிக்கப்படுகின்ற வருமானத்தை அறிக்கையிடுவதற்காக அந்தப் பிரிவில் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.

(இ) நானாவித வருமானப் பிரிவின் வருமானத்தை அறிக்கையிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற கணனி முறைமையில் காணப்பட்ட நலிவுகளை மாற்றியமைப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### இருப்பு மெய்மையாய்வு

களஞ்சியம் தொடர்பாக 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் பயன்படுத்த முடியாத 15 மொனிட்டர்கள், 12 மத்திய தயாரிப்பு அலகுகளையுடைய கணனி, பிரிண்டர் மற்றும் அது சார்ந்த இலத்திரனியல் துணைப்பாகங்களை அகற்றுதல் தொடர்பாக சரியான திட்டமுறையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.5 பெறுகைகள்

#### ஒப்பந்த நிர்வாகம்

கொட்டுகொட புதிய சந்தைத் தொகுதியின் நிர்மாண நடவடிக்கைகள் தனியார் நிர்மாணக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 1,814,046 நிறுத்தி வைத்தல் பணம் கழிக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கட்டிடம் நிர்மாணித்ததன் பின்னர் 10 கடைகளில் இனங்காணப்பட்டிருந்த 14 குறைபாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு 2018 மார்ச் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | கணக்கீடு | கணக்கு மீதிகளில் வேறுபாடுகள் காணப்பட்டமை |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | வங்கி இணக்கக் கூற்று தயாரித்தலில் குறைபாடுகள் காணப்பட்டமை |
| (ஈ) | சொத்துக் கட்டுப்பாடு | பொதுவசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணி பயனுள்ளதாக ஈடுபடுத்தப்படாமை |